ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1377/13 - 2005 ජනවාරි 28 වැනි සිකුරාදා - 2005.01.28

*1377/13 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பு

*1979.08.06 ஆம் திகதியையும் 48/ 2 ஆம் இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பைப் பின்வருமாறு திருத்தியமைப்பதற்கான பணிப்புரையை அதிமேதகு சனாதிபதி அவர்கள் விடுத்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதிமேதகையரின் ஆணைப்படி,*

*டபிள்யூ. ஜே. எஸ். கருணாரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 1,*
*2005, சனவரி 26.*

1. செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பின் 5 ஆம் உறுப்புரையை அடுத்து பின்வரும் உப உறுப்புரை இத்தால் சேர்க்கப்படுகின்றது:-

5\. (அ) அமைச்சுச் செயலாளர் ஒருவர், தமது கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் காரணங்களின் பேரில், அவர் முன்பு ஆற்றிய சேவைக்கு அன்றேல் பதவிக்கு மீள அனுப்பப்படும் சந்தர்ப்பங்களில், அவர் செயலாளராக அமர்த்தப்படுவதற்கு முன்னர் இருந்த சேவையில் வகித்த பதவியில் தங்கியிருப்பாராகில், அவருக்கு உரித்தாக வேண்டிய முதுமுறை, அமைச்சுச் செயலாளர் என்ற வகையில் கிடைக்கப்பெற்ற சம்பள அளவுத் திட்டத்துடன் அவருக்குத் தனிப்பட்ட வகையில் உரித்தாக வேண்டும்.

(ஆ) மேலே 5(அ) உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் 2004, ஏப்பிறல் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

*02-390*